**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள்
**இ.ம.எண். 1/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 82/2021**

ஜெயகுமார் ..மனுதாரர்/வாதி

//எதிர்//

பாலாஜி (எ) வெங்கடசுப்ரமணியன் ..எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று 25.09.2025 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. நாரயணமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. K. சங்கரன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று 09.10.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரரால் இம்மனுவானது கடந்த 23.01.2025 அன்று விசாரணைக்காக அழைத்து ஆஜராகாததால் தள்ளுபடி ஆன வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுவின் சுருக்கம் :</u>**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதிவாதி மீது தாவா சொத்தில் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்து வழக்கு விசாரணைக்காக 23.01.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், தான் 22.01.2025 அன்று திடீரென்று அலுவலக வேலை நிமித்தமாக சென்னை சென்றுவிட்டதாகவும், தனது வழக்கறிஞர் அவர்கள் வழக்கு விசாரணைக்காக வரும் போது அவர் வந்த இருசக்கர வாகனம் Repair ஆனதால் நீதிமன்றத்திற்கு வரும் போது காலதாமதமாகவிட்டதாகவும், எனவே, விசாரணைக்காக தன்னை அழைத்து தான் ஆஜராக முடியாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி

செய்யப்பட்டது என்றும், தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், எனவே, கடந்த 23.01.2025 அன்று விசாரணைக்காக அழைத்து நான் ஆஜராகாததால் தள்ளுபடி ஆன வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து மேற்படி வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிருரையின் சுருக்கம்:</u>

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்ததக்கது அல்ல. அசல் வழக்கில் 04.04.2024 அன்று வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டு 20.06.2024 அன்று தரப்பினர்கள் விசாரணைக்கு தயார் நிலையில் இருக்கும்படி தெரிவித்து இடைமனு எண் 169/2021 முடிக்கப்பட்டு மனுதாரருக்கு போதிய அவகாசம் அளித்து 12.08.2024 அன்று விசாரணைக்கு வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் மனுதாரர்/வாதி வழக்கு விசாரணையை துவங்கவில்லை என்றும், அதன்பின்னர் அவருக்கு போதிய அவகாசம் அளிக்கப்பட்டு 26.09.2024 அன்று விசாரணைக்கு போடப்பட்டு அன்றைய தினமும் மனுதாரர் வழக்கு விசாரணையை துவங்க தயாராக இல்லை என மனுதாரர் தரப்பில் மீண்டும் அவகாசம் கேட்டதன் பேரில் 21.10.2024 அன்றும், அதன் பின்னரும் மனுதாரர் கேட்டதன் பேரில் 25.10.2024, 11.10.2024, 14.11.2024, 26.12.2024, 23.01.2025 ஆகிய தேதிகளில் விசாரணைக்காக தேதி குறிப்பிட்டும், அசல் வழக்கு 2021ஆம் வருடம் தாக்கல் செய்து 3 ஆண்டுகள் முடிந்த பின்னரும் வழக்கினை நடத்த தயாராக இல்லை என்றும், இறுதியாக வாதியின் தவறுக்காக தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 23.01.2025 அன்று விசாரணைக்கு வரும்போது இருசக்கர வாகனம் பழுதானதாக சொல்லியுள்ளது உண்மை அல்ல என்றும், வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளார் என்றும், உண்மையிலேயே 23.01.2025 அன்று வழக்கு தள்ளுபடி ஆன விபரம் தெரிந்து கொண்டு இருக்கும்பட்சத்தில் மறுநாளே இம்மனுவினை தாக்கல் செய்யாததற்கு எந்த காரணமும் தெரிவிக்கவில்லை என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**<u>தீர்வு</u>**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரர் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்து வழக்கு விசாரணைக்காக 23.01.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், மனுதாரர் 22.01.2025 அன்று திடீரென்று அலுவலக வேலை நிமித்தமாக சென்னை சென்று சென்று விட்டதாலும், மனுதாரரது வழக்கறிஞர் அவர்கள் வழக்கு விசாரணைக்காக வரும் போது அவர் வந்த இருசக்கர வாகனம் பழுதானதாலும் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாததால் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டதுஎன்றும், தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ ஆஜராகாமல் இருக்கவில்லை என்றும், எனவே, கடந்த 23.01.2025 அன்று தள்ளுபடி ஆன வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளார்.

6. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரருக்கு போதிய அவகாசம் அளித்து 12.08.2024 அன்று விசாரணைக்கு வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், மனுதாரர் தரப்பில் மீண்டும் அவகாசம் கேட்டதன் பேரில் பல வாய்தாக்கள் போடப்பட்டும் வழக்கு விசாரணையை மனுதாரர் துவங்கவில்லை என்றும், மனுதாரர் வழக்கினை நடத்த தயாராக இல்லாததால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 23.01.2025 அன்று விசாரணைக்கு வரும்போது இருசக்கர வாகனம் பழுதானதாக சொல்லியுள்ளது உண்மை அல்ல என்றும், வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவதற்காக தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில், மனுதாரர் சென்னை சென்றுவிட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், தான் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கவில்லை என்றும், எனவே,

கடந்த 23.01.2025 அன்று தள்ளுபடி ஆன வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவதற்காக தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இருந்தபோதிலும் மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என கருதுவதால் இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10. முடிவாக, மனுதாரர், இந்த மனுவில் செலவுத்தொகையாக ரூ.3,000/—த்தை மாவட்ட சமரச மையம், மயிலாடுதுறையில் 23.10.2025 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 09.10.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.10.09 16:19:16 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**தரங்கம்பாடி.**

**இணைப்பு :**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.10.09 16:19:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**